587

UNITY
இணைக்கம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
587/57
4 - MAY 1957
MADRAS



வடலூர் சத்திய ஞான சபை

மார்ச்சு, ஏப்ரல் 1957.

(விலை. 0—1—6)

பொருளடக்கம்

		பக்கம்
1	தேர்தல்	1
2	ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் பொன் விழா	2
3	கரபாத்ர சிவப்பிரகாச குருமூர்த்திகளின் 39-வது ஆண்டு வழிபாட்டு விழா	2
4	ஈகையும் அருளும்	3
5	பட்டினத்தடிகள் உபதேசம்	4
6	சஙக காலத்தில் தந்தைக் கடன்	5
7	பொன் மொழிகள், மதிப்புரை	6
8	Swami Vivekananda's Ideal Religion	7
8	Think a While	8

THE ESSOR ENGINEERING WORKS

ENGINEERS, BRASS & IRON FOUNDERS, ETC.,
53, Sydenhams Road, Periamet, Park Town, Madras.

We manufacture

RICE HULLER SPARES, 12" FLOUR MILLS ETC.

and undertake

SUPPLY OF CAST IRON AND IRON AND GUNMETAL MACHINERY PARTS, ETC.
Our specialities are RICE HULLER CYLINDERS & COVERS.

Enquiries Solicited

Printed by M. Madhusoodana Sivam at Thiruppugal Amirtham Press, 144, Swaminaicken St., Chintadripet Madras & Published by M. Kundanprasad Lal at No. 124, Swaminaicken St., Chintadripet. 24—4—1957

Editor:
Vidwan S. Govindarajan.
Managing Editor: M. Kundanprasad Lal.

உ
முருகா

இணைக்கம்

" ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செய் "

மலர் 10 | மார்ச்சு, ஏப்ரல்-1957 | இதழ் 9, 10

தேர்தல்

பிப்ரவரி மாதப் பிற்பகுதியிலும் மார்ச்சு மாத முற்பகுதியிலும் மக்களிடையே பரபரப்பும் கலவரமும் தோன்றின. "வோட்" கோஷங்கள் தெருக்களில் ஆரவாரித்தன; மேடைப் பேச்சுக்கள் வசை முதல் கோடை வரையில் மிளிர்ந்தன. சமூகத் தொண்டு, சுயநலம் அற்ற ஊழியம், பொருளாதார முன்னேற்றம், பணியில்லாத் திண்டாட்ட ஒழிவு, உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் தருவதனுல் வரும் இன்புற வாழ்வு முதலியவை பேச்சுக்களில் மிகவும் தாராளமாக வழங்கப்பட்டன. ஆனுல் தேர்தலின் முக்கிய தத்துவம்யாது? குடியரசாகிய நமது நாட்டைப் பல மக்களும் இன்புற வாழத் தகுந்த ஏற்பாடுகள் ஆவன செய்ய கல்வி அறிவு ஒழுக்கம் பெற்றவரும் அன்பும் அருளுடையவருமாகிய பெரு மக்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு நாட்டை ஆளும் பொறுப்பைக் கொடுப்பது. அத் தேர்தல் போது ஜன மக்களின் அறிவுக்கேற்ப விளங்கும்; நாட்டின் நாகரிகத்தையும் ஒருவாறு தெரிவிக்கும். சுயநலங் கருதாது பலர் நன்மைக்கே உழைப்பதுடன் ஆண்டவனுடைய கட்டளையாகக் கருதி அப்பணியைச் சேவையாகச் செய்து அதனுல் வரும் பலனைச் சிறிதும் கோராமல் இறைவனுக்கே சமர்ப்பிக்கின்றவர்கள் கர்ம யோகிகள். இவ்வித யோகிகள் நிறைந்த நாடே புண்ணிய பூமி.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளுடைய தெய்வீக ஆட்சி

பொன் விழா

1957 ஆம் வருஷம் மார்ச்சு மீ 20உ புதன்கிழமையன்று, சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள சென்னை வேதாந்த சங்கத்தில் ஐயா. கு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் ஜகத்குரு காமகோடி பீடம் ஸ்ரீசங்கராசார்ய சுவாமிகள் அவர்கள் பீடமேறி ஐம்பதாண்டுகள் தெய்வீக ஆட்சி செலுத்திய பொன் விழா கொண்டாடப் பெற்றது. அப்போது டாக்டர் துரை அரங்கசாமி அவர்கள் ஆதி சங்கராசார்ய சுவாமிகள் அவர்கள் விவரித்துக் காட்டிய அத்வைத மார்க்கத்தினை விளக்கிக் காட்டி அம் மார்க்கத்தை வழிவழியாக வளர்த்த பரம்பரையில் இன்று ஆட்சி செலுத்தும் காமகோடி பீடம் ஆசார்ய சுவாமிகள் அவர்கள் வாழ்க்கை வரலாறு, தொண்டு, உபதேசங்கள் எல்லாவற்றையும் எடுத்து விளக்கினார்கள். இறுதியில் நம் ஆசார்ய சுவாமிகள் தொடர்ந்து நம்மிடையில் இருந்து தொண்டாற்றுவதற்காக எல்லாம் வல்ல இறைவன் அவர்களுக்கு நீண்ட ஆயுளும் ஆற்றலும் அருளவேண்டும் என்ற பிரார்த்தனைத் தீர்மானம் நிறைவேறியது. செயலாளர் M. குந்தன் பிரசாத் லால் அவர்கள் நன்றியுரையுடன் விழா முடிவு பெற்றது.

கரபாத்ர சிவப்பிரகாச குரு மூர்த்திகளின் 39-வது ஆண்டு வழிபாட்டு விழா

1957 ஆம் ஆண்டு மார்ச்சு மீ 25உ திங்கட்கிழமை குருமூர்த்திகளின் வழிபாட்டு விழாவானது சுவாமி அவர்கள் வியாசர் பாடியில் ஏற்படுத்தின ஆனந்தாஸ்ரம சாது மகா சங்கக் கட்டிடத்தில் நடைப்பெற்றது. காலையில் அபிஷேக ஆராதனைப் பூசையும் நடுப்பகலில் ஏறக்குறைய 2000 மக்கள் கலந்து கொண்ட மகேஸ்வர பூசையும் மாலை 4 மணிக்கு மேல் அறிவுரை விரிவுரைகளும் நிகழ்ந்தன. தவத்திரு சுவாமி இராஜேஸ்வரானந்தா அவர்கள் தலைமை வகித்தனர். திரு. ந. சி. சிவசங்கர நாராயணன் அவர்களும், தவத்திரு. ஐயாறடிகளார் அவர்களும், திரு. M. குந்தன் பிரசாத் லால் அவர்களும், டாக்கடர் மோ. அ. துரை அரங்சாமிப் பிள்ளை அவர்களும், தவத்திரு. சுவாமி அருணகிரிநாதர் அவர்களும் முறையே "நமது மொழியும் முதல்வனும்", "பொருள்", "வாழ்க்கையில் வேதாந்தம்", "அரைப் பாவில் வேதாந்தம்", "தமிழர் துறவு நிலை" எனும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். இறுதியில் சங்கமூர்த்தி தவத்திரு. சுவாமி முக்தானந்தா அவர்கள் சார்பாகவும், சாது மகா சங்கத்தின் சார்பாகவும் செயலாளர் திரு P. பத்மநாபம் அவர்கள் நன்றி கூறினர். கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகளுக்கு மாலை பூசையானவுடன் விழா முடிவு பெற்றது.

ஈகையும் அருளும்

(க. முருகையன்)

அருளே வடிவாய் அமைந்த இறைவன் அலைகடல் எல்லை யாய் அமைய அனைத்துலகும் படைத்தான்; உணர்ச்சியே உரு வாயமைந்த உயிர்களைப் படைத்தான்; இவ்வுயிர்கட்குப் பற்றுக் கோடாகப் பொருள்களைப் படைத்தான்; அவற்றின்மீது படர்தர உயிர்கட்குப் பற்றினைப் படைத்தான்; இன்ப துன்பங்களைப் படைத்தான். இறைவன் படைப்பு மிகவும் வியப்பிற்குரியது. பற்றால் இன்ப துன்பங்கட்கு ஆளாகின்றமையை மாந்தர் உணர்ந்தும், அப் பற்றினையே பற்றி நிற்கின்றனர். அப் பற்று உயிர்ப்பற்று, மக்கட்பற்று, பொருட்பற்று எனப் பல்வகைப்படும். அப் பற்றினால் துன்பமே யொழிய இன்பமில்லை. அப் பற்றை யொழித்தல் வேண்டின் பற்றற்றான் தாளினையே பற்றுதல் வேண்டும். இதனை உளங்கொண்டே திருவள்ளுவனார்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்றார். இவ்விதம் பற்றை அறவே ஒழிக்கத் தலைப்பட்டா ரிடத்து ஈகை, அருள் முதலியன தாமே வந்து அடையும்.

ஈகையாவது எக்காலத்தும் எவ்விடத்தும் யாவர்க்கும் ஒருவன் தன்மாட்டுள்ளதொன்றைப் பகுத்தீதல். புகழும், பெருமையும், கைம்மாறும் நோக்கிச் செய்யப்படுவது ஈகை யன்று. பயனோக்காதீதலே ஈகை. ஈகை சொலற்கருஞ் சிறப் புடைத் தாதலின் "மேலுலகம் இல்லெனினு மீதலே நன்று" எனவும், "ஈதல் குலனுடையான் கண்ணேயுள" எனவும்,

"ஈத்துவக்கும் இன்ப மறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்" எனவும்,

"சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை" எனவும்

மக்கள் மனத்தே ஈதல் இயல்பு கால்கொள்ளுமாறு நந் திருவள் ளுவனார் பகுத்தோதினார்.

இனி நாம் அருள் இன்னதென்பதைக் காண்பாம். அருளா வது எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்வுயிர் மாட்டும் பேரன்பு. இஃது எல்லையற்றது; சாதிமத வேற்றுமைகளைக் கடந்தது. இவ் வருள் இத்துணையளவு உயர்ந்ததாதலின் நந்திருவள்ளுவனார் "அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்" எனவும், "அருளிலார்க் கவ்வுலக மில்லை" எனவும், "அல்லல் அருளாள்வார்க் கில்லை" எனவும் மெய்பெற விரித்துக் கூறினார். இவ்வருளுடையான் உலகிற்கோர் எடுத்துக் காட்டாக விளங்குவான். மனிதவுடல் ஏற்ற ஒவ்வொருவரும் ஈகை வழி நின்று அருள் தழைக்க வாழ்

தல் வேண்டும். இல்லையேற் பயனில்லை. ஆதலின் மாந்தர் திருவள்ளுவர் உரைகளை ஊன்றி நோக்குவாராக.

பட்டினத்தடிகள் உபதேசம்.

விஞ்ஞான உலகத்தில் ஆண்டவனுக்கு இடமுண்டோ என்று மக்கள் திகைப்படைந்திருக்கின்றார்கள்; ஆனால் விஞ்ஞானமோ பூகம்பம், புயற் காற்று, கடற் பொங்கு, விஷக்கிருமிகள் ஆவேசம் முதலியவைக் கண்டு நடுங்குகின்றது. வெற்றிபெற முயலுகின்றது. இவ்வித போராட்டம் ஓய்ந்தபாடில்லை. பிறந்த விஞ்ஞானிகள் பலர்; இறந்த விஞ்ஞானிகளும் பலர்; ஆனால் விஞ்ஞானமோ காரண காரிய நியமத்திற்குட்பட்டுத் தன்னை அடுத்தவர்களுக்குத் தன் அபாரமான சக்தியைத் தருகின்றது. அதனால் அடையும் நற்பயனோ அல்லது விளையும் துற்செயலோ மக்களைப் பொறுத்தது. வாழ்க்கையோ நிலையற்றது; 'பிறந்தான். இறந்தான்' என்ற இரண்டு பதங்களில் அடங்குகின்றது. இவ்வித வாழ்க்கையை நன்குணர்ந்த பட்டினத்தடிகள்,

"முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னி னம்பலவ
ரடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே"

என்று இரக்கத்துடன் பாடியருளியுள்ளார்.

மக்களனைவரும் அறிவுடையவர்கள் என்பதில் ஐயப்பாடு ஒன்றுமில்லை; ஆனால் அஞ்ஞானத்தையும் பெற்றிருக்கின்றார்கள். ஆராயுமிடத்து எல்லாம் வல்ல பேரறிவு ஒன்று உண்டு என்று விளங்குகின்றது. அதுவே கடவுள், தெய்வம், ஆண்டவன், இறைவன்; அதுவே சிவன், விஷ்ணு, கணபதி, முருகன், துர்க்கை பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி, பகவதி.

அலையும் மனத்தை இறைவனிடத்தில் செலுத்தினால் வாழ்க்கையானது செம்மை பெறும். இன்பமடையும்; இல்லையேல் சுழற்காற்றில் அகப்பட்டுக்கொண்ட செத்தை போலச் சுகதுக்கத்தில் சிக்கிக்கொண்டு சுழல வேண்டும். எனவே கடவுள் ஒன்று உண்டு என்று நிச்சயம்பெற வேண்டும்; அவ்வித நிச்சயத்துடன் அன்பினை அடிப்படையாக வைத்து வாழ வேண்டும்; வாழ்க்கையில் அருளுடைமை மிளிர வேண்டும்; நம்மாலியன்ற மட்டும் உடல் பொருள் ஆவியினால் மக்களுக்கு உழைக்க வேண்டும்; அவ்வுழைப்பை ஆண்டவனுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்; பசிப்பிணியைப் போக்கவேண்டும்; நல்லறத்தினின்றும் நழுவாமலிருக்க வேண்டும்; எல்லாருடன் நட்புகொள்ள வேண்டும்; நடுநிலைமையினின்றும் நீங்காமலிருக்க வேண்டும்.

சொருப நாட்டம் விடாமலிருக்க வேண்டும்; சற்குருவை நம்பவேண்டும்; துன்ப உடல் வாழக்கையைப் பொம்மலாட்ட மென்றிருக்க வேண்டும்; சந்தையின் கூட்டம் உறவினர்களென்றும், நிலையற்ற உலக வாழ்வு நீரோட்டமென்றும் மனத்தின்கண் பதிய வேண்டுமென்ற கருத்துக்களை வெகு அழகாகப் பட்டினத்தடிகள் பாடியுள்ளார்.

"ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வ மெல்லா
மன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பு
நன்றென் றிருநடு நீங்காமலே நமக்கிட்டபடி
யென்றென் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே.'

"நாட்டமென்றேயிரு சற்குருபாதத்தை நம்புபொம்ம
லாட்டமென் றேயிரு பொல்லா வுடலை யடர்ந்த சந்தைக்
கூட்டமென் றேயிரு சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீ
ரோட்டமென் றேயிரு நெஞ்சே யுனக்குப தேசமிதே"

சங்க காலத்தில் தந்தைக் கடன்

இற்றைய காலத்து இளைஞர்கள் தம் மூதாதைகளை நாகரிகமற்ற மக்களென்றும் உலக அறிவிலிகளென்றும் கருதி இறுமாப்படைகின்றார்கள். முற்போக்கு எண்ணங்கள் தங்களிடையே மலிந்து கிடக்கின்றன வென்றும், உரிமைக்குப் போராடுகின்றவர்கள் தாங்களே என்றும் தங்களைப் பாராட்டிக் கொள்கின்றார்கள். ஆனால் உரிமைப் பேச்சு வரம்பற்று ஓடுகின்றது; கடமையுணர்ச்சி தளர்ந்து தள்ளாடுகின்றது. இதுவோ முற்போக்கு! இதுவோ மக்கள் பண்பு! அறிவுடையவர்கள் தங்கள் கடமையையுணர்ந்து அதைச் செவ்வனே செய்து அப்பணியையே திருப்பணியாகக் கருதி இன்பமடைந்து தங்கள் வாழ்வை உயர்த்துவார்கள்; அவர்கள்தான் எல்லாம் உடையவர்கள். இக் கருத்தைத் திருவள்ளுவர்,

"அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடை ரேனு மிலர்"

என்று நன்கு விளக்கியுள்ளார். ஆகவே தன் மகன் ஐயந்திரிபு அறக் கற்றல் வேண்டும்; அறிவு பெற வேண்டும்; ஒழுக்கத்தில் நிற்கவேண்டும் என்பதை நன்குணர்ந்து அதற்கு ஆவன செய்வது தந்தையின் கடமையாகும். நமது சங்க காலத்து நூல்கள் இக் கருத்தினை வற்புறுத்தியுள்ளதைக் காணுமிடத்து அக்காலத்தில் தமிழர் பண்பு மிகவும் உயர்ந்த நிலையிலிருந்தது என்பதற்கு ஐயமில்லை. ஒவ்வொரு தந்தையும் தன் கடமையைச் செவ்வனே செய்வானாயின் தமிழ் மக்கள் சான்றோராக விளங்குவார்களென்பது நிச்சயம்.

"சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" —புறநானூறு.

பொன் மொழிகள்

''கடவுளை நம்பினோர் கைவிடப்படார்''

''கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி''

''குலனுடைமையிற் கற்புச் சிறந்தன்று''

''பொறுத்தவர் பூமியாள்வார் பொங்கினவர் காடாள்வார்''

''நடுவுநின் ருர்க்கன்றி ஞானமு மில்லை''

''மிகுதி வேண்டுவோன் தகுதி கண்டான்''

''செய்த நன்றி யொருநாளு மறக்க வேண்டாம்''

''எஞ்ஞான்றும் தன்னிலைமை குன்ருதவர் முத்தர்''

''இராப்பக லற்ற இறையடி யின்பம்''

மதிப்புரை

சென்னை மாநகரில் கல்வி அறிவு ஒழுக்கம் மாணவர்களிடத்தில் நிலைபெற்று அவர்கள் வாழ்க்கையில் மிளிர வேண்டுமென்ற பெரும் நோக்கத்துடன் உழைக்கும் பள்ளி ஹிந்து தியாலாஜிகல் உயர் நிலைப் பள்ளி என்பது வெள்ளிடைமலை. அப் புகழ்பெற்ற உயர் நிலைப் பள்ளித் தலைமையாசிரியராக அமைந்துள்ள ஸ்ரீ S. பாலகிருஷ்ண ஜோஷி அவர்களும் தன்னலம் கருதாது அல்லும் பகலும் இளைஞர்களுக்காக உழைத்து வருவது அவருடைய பரந்த நோக்கமும் உயர்ந்த லட்சியமுமாம். அவர்கள் ஸ்ரீகாஞ்சி காமகோடி மடாதிபதியான ஸ்ரீ சந்த்ர சேகரேந்த்ர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் வாழ்வும் பெருமையும் என்பது குறித்து ஆற்றிய ஆங்கிலச் சொற்பொழிவு, வித்வான் ஸ்ரீ தணிகை உலகநாதன் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. ஸ்ரீ ஜோஷி அவர்கள் சுவாமிகளுடைய கல்வித் திறமையையும், எளிய வாழ்க்கையையும், ஞான நிலையையும், வெகு அழகாகக் கூறியுள்ளார்கள். சுவாமிகளை ஒரு தெய்வீக எரிமலையாக உருவகப்படுத்தியிருக்கின்ருர். அவ்வெரிமலையின் ஞானச் சுடர் எரிந்து கொண்டே இருக்கின்றது; தீயஎண்ணங்கள் தீயசக்திகள் எரிந்து சாம்பலாய்ப் போகின்றன என்பதைச் செவ்வனே காட்டியுள்ளார் தலைமை ஆசிரியர். அதுமட்டுமல்ல; நமது ஹிந்து சமுதாயத்தை ஒன்று சேர்க்கும் மாபெரும் சக்தி யென்று விளக்கியுள்ளார். சுவாமிகள் ஏற்படுத்தின திருப்பாவை திருவெம்பாவை விழாக்கள், இராமாயணப் பாராயணம் முதலியவை போதிய சான்ருகுவன. இவ் வுயர்ந்த சொற்பொழிவைப் புத்தகமாக வெளியிட்டு இலவசமாக வழங்குவதற்காகப் பொறுப்பு எடுத்துக் கொண்ட T. B. மேத்தா அண் சன்ஸ் அவர்களுடைய தொண்டு பாராட்டத் தக்கது.

Swami Vivekananda's Ideal Religion

Logicians define man as a rational animal with characteristic features viz humanity and rationality, but we find in the world that there are men who lead a life which is in no way better than beasts. How to reconcile this? The answer that appears to be reasonable is that humanity & rationality are latent in them and their development has not reached such a stage as to manifest the higher qualities. Their journey commences with entry into the world and is sustained by eating and sleeping and ends with death. It is therefore evident that mankind includes men and women from beastly qualities to the divine light.

Religion is the means by which mankind unfolds its development and reaches its highest manifestation. Therefore Swami Vivekananda says that a religion should satisfy all categories of mankind and lead to the destination ie Bliss. All creatures get knowledge in their own way and try to enjoy therefrom. "Instinct, reason and inspiration are the three instruments of knowledge. Instinct belongs to the animals, reason to men and inspiration to God-men"

Swami Vivekananda lays stress on thc fact that there is one method in all knowledge that we have and that method is concentration. He goes further in his emphasis when he says that concentration is the only key, the one power either for mundane things or for spiritual advancement. Concentration is nothing but 'Yoga' to him. For different moods there are different kinds of yoga.

"Karma yoga teaches how to work for work's sake, unattached, without caring who is helped, and what for. The Karma yogi works through his own nature, because it is good to work and has no object beyond that". This is prescribed for the active working man.

Now comes the emotional man "who loves the sublime and the beautiful to an excessive degree" Swamiji says that to such a man God himself is love and is seen every where in every thing. "Where the husband kisses the wife, He is there in the kiss; where mother kisses the child, He is there; friends clasp their hands, He, the Lord, is there present, standing as the God of Love. When a great man wants to help mankind, He is there giving it as love to mankind".

The third is the philosopher, the thinker who wants to go beyond. To him "God is not only the Father or Mother, not only the Creator of this universe, its Protector, its guide. For him God is the life of his life, and soul of his soul. God is his own self. Nothing remains to him. All the mortal parts have been pounded by the ways of philosophy and brushed away. What remains is God himself".

In conclusion swamiji draws the attention of one and all that religion should be practised in life. With the vigour of thought his words flow as follows:—

"Then again, all the various yogas, have to be carried out into practice; theories will not do. First we have to hear, then we have to think; reason it out impress it in our mind; and lastly we have to meditate upon it, realize it, until it becomes our whole life. No more it remains as ideas or as theories; it comes into our self. Religion is realization, not talk, nor doctrine, nor theories, however beautiful they may be. It is being and be coming not hearing or acknowledging; it is not an intellectual assent, but the whole nature becoming changed into it. That is religion".

THINK A WHILE

"The soul enchained is man and free from chain is God"

— Sri Ramakrishna Paramahamsa.

"There is no peace in the heart of a carnal man, nor in a man who is given up to outward things, but in a fervent and spiritual man".

— Thomas A Kempis.

"Allow not the image of an unholy thought to enter thy mind through the sense-gates"

"Never, never, lose sight of the highest ideal, the summum bonum of life-Bliss".

"Make thy heart pure as a mirror to reflect the effulgent Self".

Sekars will fit

The THIN Man

The SHORT Man

The TALL Man

The STOUT Man

The AVERAGE Man

3, North Mada Street, Mylapore, Madras

REG. NO. M. 5040 UNITY

RAMAN'S ENGINEERING WORKS.

333, MINT STREET, MADRAS.

★

Manufacturers of All Kinds of
Agricultural Implements
and
General Engineering Contractors

★

WORKSHOP:—

15, Teynampet Ramaswamy Mudali Street,
Kondithope, Madras.

இணைக்கம்

" ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செய் "

மலர் 10 | ஜனவரி, பிப்ரவரி-1957 | இதழ் 7, 8

குடியரசுதின விழா

நமது நாடு சுதந்திரம் பெற்று ஒன்பது ஆண்டுகள் கழிந்தன. குடியரசாக மாறி ஆறு ஆண்டுகள் சென்றன. குடியரசின் முக்கியத்தத்துவம் குடிகளே தங்களுக்கு ஆவன செய்து கொள்ள உரிமை பெறுவது; ஆனால் யாவரும் ஒருமனப்பான்மையோடு பெரும்பாலோருக்கு நலம் புரிவதில் நோக்கங் கொண்டு, அதற்கேற்ப உழைத்து நாட்டிற்கு மேன்மையைத் தருவது எளிதன்று. ஆகவே மக்கள் கற்க வேண்டியவைகளைத் தக்க முறையில் கற்றுத் தம் வாழ்க்கையில் பரிமளிக்குமாறு செய்ய வேண்டும். முக்கியமாகத் தன்னலங்கருதாது "நாம் வாழ்வதன்றிப் பிறரும் வாழவேண்டும்" என்ற நோக்கம் மனத்தின்கண் பதிந்திருக்க வேண்டும். மகாத்மா காந்தி அவர்கள் "அடிமை, வாழ்வினின்றும் சுதந்திரம் பெற்றோம்; வறுமை, அறியாமை பிணியினின்றும் இன்னும் விடுதலையடையவில்லை" என்று போந்தார்; இன்றுவரையிலும் அது உண்மையாகவே இருக்கின்றது. அரசாங்கம் முயற்சி செய்து கொண்டு வருகிறது. பொருளாதாரத்துறையிலும் கல்வித்துறையிலும் மக்கள் விடுதலை அடைய தனவந்தர்கள் பொருளுதவியும், அல்லாதவர்கள் உடல் உழைப்பும் தந்தருளுமாறு வேண்டுகின்றோம்.

நாகரிக நாடு எது?

அணுகுண்டு காலத்தில் விஞ்ஞானம் மாக்களிடத்தில் சிக்கிக் கொண்டு படும்பாடு நினைக்க வொண்ணுது. விஞ்ஞானம் வளர வளர மிருகத்தன்மை மேம்பாடடைகின்றது. அத்தன்மைக் கேற்ப சிற்றின்பவுலகம் சித்தரிக்கப்படுகிறது. விலங்குகளும் வெட்கமடைய மனிதன் நடிக்கின்ருன். விஞ்ஞானப்போர்வை யணிந்துநாகரிகப்பெயர் புனைந்து பேய்க்கூத்தாடுகின்ருன்;இருப தாம் நூற்ருண்டு இக்கூத்தைக் கண்டுகளித்து உலகம் முன்னேறுகின்றது என்று இறுமாப்புக் கொள்கின்றது. அந்தோ! என்ன விபரீதம்! நாகரிகம் எங்கே! உணவில் உடையில்!! வஞ்சத்தில்! பொய்மையில்! வேஷத்தில்! அறிவுப்போலியில்!

கற்றது என்ன? தான் வாழப் பிறர் அழிந்தாலும் தவறல்ல; தருமமே. தான் கொண்ட சுயநலக்கொள்கையை நிறைவேற்ற எவ்வித உபாயமும் நலந்தான். தற்கால உலகப்போக்கு இத் தன்மைய நிலையிலிருகின்றது என்பது வெள்ளிடை மலை. ஆனுல் உலக நியமம் தாற்காலிகமாகத் தடைப்பட்டாலும் தன் ஆட்சியைச் செலுத்தாமலிராது.

காணப்படுகின்ற உலகம் காரியம்; காரணமின்றிக் காரியம் தோன்ருது. தோன்றுவதற்கு முதற்காரணம் நிமித்தகாரணம், துணைக்காரணம் வேண்டும் முக்கியமாக முதற்காரணம், நிமித்த காரணம் வேண்டும். இவ்விரண்டு காரணங்களும் ஓரிடத்தில் இருந்தால் அதற்குக் காரணகர்த்தா என்று அறிஞர் சொல் கின்ருர்கள். அக் காரணகர்த்தாவைத் தான் கடவுள், ஆண் டவன், ஈஸ்வரன், அல்லா, தேவன் என்று பல நாமங் களால் அறிகின்ரேம்; அறிவது மட்டுமல்ல, நிச்சய புத்தி யுடன் வாழ்க்கையை நடுத்துபவன் தான் ஆஸ்திகன்; மற்றவர் களெல்லோரும் நாஸ்திகர்கள்.

ஆஸ்திகனுக்கும் நாஸ்திகனுக்கும் என்ன வேறுபாடு? கடவுள் உண்டு என்று வாயளவில் சொல்லிப் பிறருக்குத் தீமை விளைவிக்கும் விலங்கா ஆஸ்திகன்? அல்ல, அல்ல. புலித் தோலைப் போர்த்துக் கொண்டு வயலில் மேயும் மாடு அவன். பிறகு யார் ஆஸ்திகன்? திருவள்ளுவர் ''அன்பின் வழியது உயிர் நிலை, அஃதிலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு'' என்று கூறிய வண்ணம் மக்கள் தன்மைக்கு உயிர் நாடியாகிய அன்பு தன்னிடங் கொண்டு உள்ளத்தில நிறைத்து, ஆண் டவன் பால் மனத்தைச் செலுத்தி மனேவாக்குக் காயங்களால் யாவருக்கும் தீமையிழையாமல் அன்பின் குழவியாகிய அரு ளுடையவனுய் தன் வாழ்க்கையைச் செலுத்தி ஆண்டவன் திரு வருளைப் பெறுகின்றவனே மானிடப் பிறவியின் பலனடைந் தவன்; அவனே மக்கள் வர்க்கத்தைச் சேர்ந்தவன்; மற்றவர்கள்

மாக்கள்; மக்கட் போர்வையைக் கொண்டு விலங்கு வாழ்க்கை வாழ்கின்றவர்கள்.

ஒவ்வொரு நாட்டிலும் மக்களும் மாக்களு மிருக்கின்றுர்கள். நாகரிக நாடு எது? பெரும்பாலோர் மக்களாகத் திகழ்கின்ற நாடே நாகரிக நாடு. ஆகவே ஐக்கிய நாடு சங்கத்தில் சேர்ந்துள்ள நாடுகளில் நாகரிக நாடுகள் எவை? மனம் மாறி ஆண்டவன் நிச்சயம் உண்மையில் பதிந்து அன்பு பரவினுலொழிய யுத்தம் நிற்காது. ஆண்டவன் பெயரினல் யுத்தஞ் செய்வது நாகரிகமா அல்லது விலங்குத் தன்மையா? அதனை ஆதரிக்கும் நாடுகள் நாகரிகம் பெற்றவையா? ஆலோசித்துத் தீர்பபுச் சொல்லுங்கள்.

கம்பன் கண்ட அமைச்சன்

கல்வி கேள்வி ஒழுக்கத்தில் தலைசிறந்தவன் அமைச்சன். தனது நலம் அடியோடு அழியா திருப்பினும் தன் நாட்டின் நலத்தையே கோரும் நடுவுநிலை நோக்குடையவன்; கோப முதலானவைகளைக் களைந்து தருமத்தை எஞ்ஞான்றும் கைப் பிடித்தவன். 'மந்திரிக் கழகு வரும் பொருளுரைத்தல்' என்பதற் கிணங்க அமைச்சன் தன் நாட்டிற்கு ஆவன செய்வதற்குப் பல ஆண்டுகளுக்குப் பின் வருவனவற்றை ஆராய்ந்து அறியும் ஆற்றலுடன் அவைகளுக்குத் தக்க ஏற்பாடுகள் செய்ய ஊக்கமும் பெற்றவன். மேலும் விடாமுயற்சியும் கல்வியறிவும் ஏற்ற ஒழுக்கமும் மானமுடைமையும் அவனிடத்தில் மிளிர் கின்றன; "விதியை மதியால் வெல்லலாம்" என்ற முதுரையை விளக்கிக் காட்டின மார்க்கண்டேயனைப் போல் ஆண்டவ னருளினல், வினையின் பயனையும் மாற்றும் ஆற்றல் பெற்றவன் அமைச்சன். "ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித், தாழா துஞற்றுபவர்" என்ற திருக்குறளின் கருத்தை நன் கறிந்து தான் எடுத்துக்கொண்ட நற்பணியில் தன் உடல் பொருள் ஆவி மூன்றனையும் அர்ப்பணஞ் செய்பவன்; மானங் கெட வரின் உயிர் நீப்பன்.

"குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனு மெய்தினுர்
நலமுத னலியினு நடுவு நோக்குவார்
சலமுத லறுத்தருந் தருமந் தாங்கினுர்"

"உற்றது கொண்டு மேல்வந் துறுபொரு ளுணருங் கோளார்
மற்றது வினையின் வந்த தாயினு மாற்றலாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவ ரரியநூலுங்
கற்றவர், மான நோக்கிற் கவரிமா வனைய நீரார்"

ராம் ரஹீம் ஒருவனே

இருபதாம் நூற்றுண்டிலும் கடவுள் பல; தன்னைக் காக்கும் கடவுள் தன் விரோதியை அழிக்கும் என்ற மனப்பான்மையையுடைய பேதையர்கள் பல நாடுகளில் வாழ்கின்றுர்கள். அவர்கள் பேதைமைக்கு அநுதாபம்! கடவுள் ஒருவனே; எங்கும் நிறைந்தவன்; எல்லா ஆற்றலும் பெற்றவன்; நம் இதயத்தில் எள்ளுக்குள் எண்ணெயிருப்பது போல் நாம் எண்ணுவதையும் சொல்வதையும் செய்வதையும் அறிபவன். நம் வினைக்குத் தக்கவாறு அவன் நியமம் நமக்குப் பலனைத் தருகின்றது.

அந்நியமத்தைக் கடக்க வல்லவர் யாருமிலர். ஆனல் உலகத்தில் தருமம் தலை சாய்ந்து அதர்மம் மேல் ஓங்குகின்றதே என்று பலர் திகிலடைகின்றுர்கள். அணுக்குண்டு, ஜலவாயுக் குண்டு கண்டு பிடித்த மனிதன் உலகத்தை ஆளப் போகின்றுன்; நல்லவர்களை வாட்டப் போகின்றுன் என்கின்ற பயம் பிடித்து விட்டது மக்களுக்கு; ஆண்டவனிடத்தில் நம்பிக்கை குறைந்து விட்டது.

சரித்திரம் தன் பாடத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்கின்றது, ''வாழ்வாவது மாயம், மண்ணுவது திண்ணம்' என்று அலெக்ஸாண்டர், சீசர், அகஸ்டஸ், பிஸ்மார்க், நெப்போலியன், ஹிட்லர், முஸோலினி எங்கே! ஏகாதிபதி சக்கிரவர்த்திகள் எங்கே! மண்ணுக்கிரையானுர்கள். அவர்கள் கைப்பற்றின நாடுகள், இராஜ்யங்கள் மண்ணுக்குச் சொந்தமாயின. மனிதனுல் கண்டு பிடிக்கப்பட்ட அணுக் குண்டு, ஜலவாயுகுண்டு அவனையே கொல்லும்; அவன் வர்க்கத்தை நாசஞ் செய்யும். அவன் உண்ண உணவும் இருக்க இடமும் பெறுமல் தவிக்கச் செய்யும். இது சத்தியம். ஆனல் இன்றைய உலகம் அறிந்ததோ? இல்லை; இல்லை; யுத்த மேகம் கறுத்துப் புத்தியைத் தடுமாறச் செய்கின்றது. ஆண்டவன் நினைப்பில்லை; அவன் அனந்த கல்யாண குணங்களில் விருப்பமில்லை; அவன் போன்றுத் துணை யென்ற அறிவுமில்லை. எல்லாப் பிராணிகளும் அவனிடத்தில் நிலை பெறுகின்றன என்ற ஆராய்ச்சியுமில்லை. இந்நிலைக்கு முடிவு இல்லையா? உண்டு, உண்டு. ஆண்டவன் அறக் கருணையை அறிந்து அருளைப் பெறுத மனிதன் மறக் கருணையால் துன்புற்றுத் தனது புத்தியை நொந்து அருளைப்பெற முயற்சிக்கின்றுன்.

மனம் போல வாழ்வு

சகலப் பிராணிகளும் உண்கின்றன, உறங்குகின்றன, இன்பம் நுகர்கின்றன. மனிதனும் அவ் வகுப்பைச் சேர்ந்தவன்; அவனும் உண்கின்ருன், உறங்குகின்ருன், இன்பமடைகின்ருன்; எனவே விலங்குகளாகிய பிராணிகளுக்கும் மனிதனுக்கும் இவ் வகையில் வேறுபாடில்லே. ஆனல் காணப்படுகின்ற உலகம் மனிதனுக்குச் சுகத்தையும் துக்கத்தையும் தருகின்றது என்பது சாதாரணக் கொள்கை. உலகமானது மலே, நதி, கடல், காடு தோப்பு வயல் முதலிய ஜடப்பொருள்களேயும், ஊர்வன, நடப்பன முதலிய பிராணிகளேயும் தன்னுள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. தான் காரியமாதலால் தனக்கு ஒரு காரண கர்த்தா உண்டு என்பதையும் தெரிவிக்கின்றது; தான் அவனுடைய படைப்பு என்பதை நன்கு விளக்குகின்றது. ஆனல் சுகமும் துக்கமும் யாருடைய படைப்பு என்கின்ற பிரச்னே கிளம்புகின்றது.

அவைகள் மனிதனுடைய படைப்பு. ஈஸ்வர சிருஷ்டி ஒரு தன்மையாக விருக்க மனிதன் தன் மனத்தின் விகாரத்திற்கேற்ப சுகமோ துக்கமோ அடைகின்ருன். ஒரு பொருளிடத்தில் ஒரு காலத்தில் விருப்பங் கொள்கின்ருன். அது கிட்டியவுடன் சுகமனுபவிக்கின்ருன். அப் பொருளேயே மற்ருெரு காலத்தில் வெறுக்கின்ருன்; அது தன்னே நீங்காதவிடத்துத் துன்பமடைகின்ருன். எனவே பொருள் ஒரு தன்மையாக விருக்க அவனுடைய விருப்பு வெறுப்பினுல் அப் பொருளிடத்தினின்றும், சுக துக்க மநுபவிக்கின்ருன். இவ்வநுபவம் உலகப் பிரசித்தம்.

வாழ்க்கை என்பது யாது? அருந்துதலா, உறங்குதலா, பொருந்துதலா? இம் மூன்றும் விலங்குகளிடத்திலும் காணப்படுகின்றன. ஆகவே இவை வாழ்க்கையின் பொருளாகா. பின் யாது? புத்தியைக் கொண்டு உலகத்தை ஆராய்ந்து கடவுள் நிர்ணயஞ் செய்து மனத்தை அவனிடத்தில் ஈடுபடுத்தி, அன்பு வடிவம் பெற்று இன்ப வாழ்வு வாழ மனத்தின் உதவி வேண்டும். மனமே பந்தத்திற்கும் விடுதலேக்கும் காரணம்.

சென்னை வேதாந்த சங்கத்தின் அங்கத்தினராகிய
திரு. க. வேம்புலி ரெட்டியார் அவர்களுடைய

திருநிறைசெல்வி
தமயந்திக்கும்

திருநிறைசெல்வன்
A. R. இராஜ கோபாலனுக்கும்

1957 ஆம் ஆண்டு பிப்ரவரிமீ 20ஆம் தேதி புதன்கிழமை
காலை 6 மணிக்குத் திருமணம் நடந்த போது
பேராசிரியர். Dr. மொ. அ. துரைஅரங்கசாமிப் பிள்ளை
பாடியருளிய

திருமண வாழ்த்து

நேரிசை வெண்பா

வேட்கை ஒழிந்ததிரு வேம்புலி ரெட்டிமகள்
வாட்கண் தமயந்தி வாழ்த்துணையாய்—மாட்சியுடன்
கோண்டறங்கள் மன்னிராஜ கோபாலன் வாழந்திடுக
மண்டுவளம் எல்லாம் மலிந்து.

இங்ஙனம்,
சென்னை வேதாந்த சங்கத்தார்.

பொன் மொழிகள்

''நல்வினை செயின் நலம் பெறலாம்''
''திரி வித உலகத் தரிதொரு ஞானி''
''வேண்டாமை வேண்டுவார் மேன்மக்க ளாவார்''
''பார்ப்பானைப் பாராத பார்வை பிறவிதரும்''
''சித்த சாந்தம் சிதம்பர மாகும்''
''காண்பானைக் காண்பான் கற்றவ னுவான்''
''இந்திரிய வடக்கம் இதமெலாந்தரும்''
''தன்னை யறிதலே சாஸ்திரத்தின் பயன்''
''சுவாநுபூதியே சுத்த நிலையாம்''
''விஷய சுகத்தை விரும்புவான் கசடன்''
''சிவாய நம எனச் செப்புதல் நன்று''
''குருபர னடி தொழக் குற்ற மெலாமறும்''

IS MAN PROGRESSING?

The twentieth century has seen scientific advancement resulting in the discovery of 'Hydrogen Bomb' 'Atom Bomb' and Inter continental Ballastic Missile' depriving man of his reasoning faculties and the inner voice of his conscience. He has progressed to kill himself physically, mentally, morally and spiritually and wipe out his species. What a wonderful progress! The so called civilized nations gloat over their victory subdueing Nature to make her a tool in their hands but she laughs in her sleeves considering the fact that she has actually won the battle and made man a destroyer of himself and his species.

The All-Merciful in his boundless love towards His creatures warn the ignorant and the idiot through the wisemen of the day; but the former pay no need to their wise counsel and on the other hand look with contempt such advice without realising in the least that there would be agreat suffering of mankind if warnings are thrown to the winds and it would be too late to make amends. The curse of whole mankind would fall on such hypocrites who talk of love and peace outside but harbour hatred and war in their heart of hearts. Their descendants after their inglorious exit from this world will have to pay the penalty for their ancestors' cruel thoughts and heinous crimes. No individual, nay nation, goes unpunished under the unrelenting Law of Cause and Effect in the cosmic world.

Oh man! Think not of your illgotten wealth and ill conceivedi power of egoism. As night follows day your fall is sure and certain. Think of the Almighty; thou art a straw in the whirlwind of Cosmic Power. Lift thy hands. Bow and surrender to Him.

Think a While

The mind is attracted to its objeots as a bird to its prey and has no respite for a moment as a boy from his play.

—Yogavasishtam.

But devout discourse on spiritual subjects is a great help to spiritual progress. Especially where persons of like mind and spirit are gathered together in God.

—Thomas A Kempis.

He does well, who serves the common good rather than his own will.

—The Imitation of Christ.

Statement about ownership and other particulars about 'UNITY'

1. Place of publication; Madras.
2. Periodicity Monthly
3. Printer's name: Sri Madhusudhana Sivam, Indian, 144, Swami Naicken Street, Chintadripet, Madras.
4. Publisher's Name: Sri M. Kunthan Prasad Lal, Indian, 20, Kalavachetty Street, Chintadripet, Madras.
5. Editor's Name: Vidwan S. Govindarajan, Indian, 43, Aiyah Mudali Street, Chintadripet, Madras.
6. Names and addresses who own the Newspaper: The Chennai Vedanta Sangam. (A Society registered under Act XXI of 1860. No shareholders).

I, M. Kunthanprasad Lal, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date 6-3-1956

(Sd.) M. Kunthanprasad Lal.
Publisher.

3, North Mada Street, Mylapore, Madras.

REG. NO. M. 5040 UNTI

RAMAN'S ENGINEERING WORKS.

333, MINT STREET, MADRAS.

Manufacturers of All Kinds of
Agricultural Implements
and
General Engineering Contractors

WORKSHOP:—

15, Teynampet Ramaswamy Mudali Street,
Kondithope, Madras.